# Tamil Nadu Electricity Board Engineers' Association

(Recognized in G.O. No. 854 dated 6-4-1946)
Regn. No.217194


President
Er. K. APPARSWAMY, B.E.,

Vice President - I
Er. N. KANNAN, M.E., M.B.A.,

Vice President - II
Er. S.KALIDAS, B.E.,

General Secretary
Er. S.SANKARA NARAYANAN, B.E., M.B.A.,

Treasurer
Er. N.SENTHIL KUMAR, B.E., PGDPM., M.I.E.,

Organising Secretary
Er. V. RAVI KUMAR, B.E.,

Secretary (Administration)
Er. T. JAYANTHI, B.E., M.B.A.,

Secretary (Publication)
Dr. S. KUMAR, M.E., Ph.D., M.I.E.,

Secretary (Legal)
Er. R. BALAMURUGAN, B.E., M.B.A.,

Secretary (Personnel Affairs)
Er. S. MANGALANATHAN, B.E.,

Secretary (Minnagam)
Er. V.KOTHANDARAMAN, M.Tech.,

Secretary / EBF
Er. S.VELMURUGAN, B.E., M.B.A.,

Treasurer / EBF
Er. S.EZHILARASAN, B.E.,


19.06.2013

பெறுநர்:

**மாண்புமிகு மின்துறை மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர் அவர்கள்,**
**தமிழ்நாடு அரசு,**
**சென்னை-600 009.**

**மடல் எண்:த.நா.மி.வா.பொ.க/பொ.செ/அ.133/13 நாள்:19.06.13**

பேரன்புடையீர்,

**பொருள்:** தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் அரசு ஆணையைத் தழுவி உதவிப்பொறியாளர்களுக்கு ஒருநபர் குழு பரிந்துரையின்படி ஊதிய நிர்ணயம் செய்வதில் மூன்று ஆண்டுகளாக கால தாமதம் - தங்களின் கனிவான தலையீடு வேண்டி அன்பான வேண்டுகோள் - தொடர்பாக.

வணக்கம்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் பணியாற்றும் உதவிப் பொறியாளர்களுக்கு அரசு ஆணையைத் தழுவி ஒரு நபர் குழு பரிந்துரைப்படி திருத்தப்பட்ட ஊதியம் வழங்குவதில் மிகுந்த காலதாமதம் நிலவுகிறது. தங்களின் கனிவான பார்வைக்கு கீழ்க்காணும் தகவல்களை முன் வைக்கிறோம்.

- தமிழ் நாடு அரசு ஒரு நபர் குழுவின் பரிந்துரையை ஏற்று உதவிப்பொறியாளர்களின் கல்வித் தகுதி, கடமைகள் மற்றும் PB3-க்கு ரூ.9300/-லிருந்து ரூ.15600/- ஆக உயர்த்தி நிர்ணயம் செய்து 26.08.2010 நாளிட்ட அரசு ஆணை எண். 312 வாயிலாக ஆணை பிறப்பித்தது. உதவிப் பொறியாளர்களுக்கு PB3-ல் ரூ.15600/- என நிர்ணயம் செய்ததுடன், தர ஊதியத்தையும் ரூ.4700/-லிருந்து ரூ.5400/- ஆக உயர்த்தி பல்லாண்டுகளாக நிலவி வந்த ஊதிய முரண்பாட்டினை களைந்தது.


"Electricity Avenue", 144, Anna Salai, Chennai - 600 002.
E-mail: tnebea@gmail.com - Web : www. tnebengineers.in
Association : 044 - 285207311044 - 28547303.

# Tamil Nadu Electricity Board Engineers' Association

(Recognized in G.O. No. 854 dated 6-4-1946)
Regn. No.217/94


- மின் வாரிய உதவிப் பொறியாளர்களுக்கு அரசு உதவிப் பொறியாளர்களைவிட கூடுதல் ஊதியம் வழங்கும் மரபு எல்லாக் காலக்கட்டங்களிலும் இதுகாறும் கடைபிடிக்கப்பட்டு வந்த போதிலும், 01.08.2010 முதல் அரசு உதவிப் பொறியாளர்கள் கூடுதல் அடிப்படை மற்றும் தர ஊதியம் பெறுகின்ற நிலையில், மின்வாரிய உதவிப் பொறியாளர்கள் மட்டும் கடந்த சுமார் மூன்றாண்டுகளாக PB2-வில் குறைவான ஊதியத்தை பெற்று வருவது மிகுந்த வருத்தத்தையும், வேதனையையும் அளிக்கிறது.

- தனித்தன்மை வாய்ந்த இத்தகைய ஊதிய உயர்வினை உதவிப் பொறியாளர்களுக்கு மட்டிலே தமிழ் நாடு அரசு வழங்கியுள்ளது. PB2-ல் ரூ.9300/- என்ற அடிப்படை சம்பளத்தில் இருந்த அனைவருக்கும் PB3-ல் ரூ.15600/- என்ற உயர்வு வழங்கப்படவில்லை. அதுபோலவே மின் வாரியத்தில் நீட்டிக்கும் போது ஒரு நபர் குழுவின் பரிந்துரை உதவிப் பொறியாளர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

- அனைத்து அரசுத் துறை பொறியாளர்களும் ஒரு நபர் குழுவின் பரிந்துரைப்படி கூடுதல் ஊதியத்தைப் பெற்றுவிட்ட நிலையில், மின் வாரியத்தில் உள்ள உதவிப் பொறியாளர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான ஊதிய உயர்வு மூன்றாண்டுகளாக மறுக்கப்படும் சூழ்நிலை உதவிப் பொறியாளர்கள் மத்தியில் மனச் சோர்வினை விதைத்துள்ளது.

- இந்நிலையில் **மாண்புமிகு அமைச்சர் அவர்களின்** கனிவான தலையீடு மட்டுமே உரிய தீர்வினை விரைவில் நல்கும் என்பதால், அரசு ஆணையைத் தழுவி தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஊதிய முரண்பாடுகளை களைந்து உரிய ஆணைகளை விரைவில் பிறப்பிக்க தக்க அறிவுரை வழங்குமாறு **மாண்புமிகு அமைச்சர் அவர்களை** பொறியாளர் கழகத்தின் சார்பாக அன்புடன் வேண்டுகிறோம்.

நன்றியுடன்,

தங்கள் உண்மையுள்ள,

(சீனி. சங்கர நாராயணன்)
பொதுச் செயளாளர்.

நகல்:

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர்
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்/சென்னை-2.


"Electricity Avenue", 144, Anna Salai, Chennai - 600 002.
E-mail: tnebea@gmail.com - Web : www. tnebengineers.in
Association : 044 - 28520'7311044 - 28547303.